பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.,எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 18 (2—8—72) புதன் வெளியூர்: ஆடி 19 (3—8—72) வியாழன் [இதழ்: 42

## இரயிலில் கள்ளப் பயணம்

### பிடிபட்டவர்களிடமிருந்து ரூ. 1.09 கோடி வசூல்

புதுடில்லி, ஆக. 2—
"இந்த ஆண்டு சனவரி முதல் சூன் வரையில், டிக்கெட்டின்றி இரயிலில் பயணம் செய்த 8,81,318 பேர் பிடிபட்டனர்; அவர்களிடமிருந்து ரூ. 1.09 கோடி வரையில் அபராதம் வசூலிக்கப்பட்டது" என்று மக்களவையில் இரயில்வே அமைச்சர் டி.ஏ. பாய் தெரிவித்தார்.

# கழகத்தோழர் கொலை செய்யப்பட்டார்

## 12 பேர் படுகாயம் -- மூவர் நிலை கவலைக்கிடம்

### வலது கம்யூனிஸ்டுக் குண்டர்களின் இரத்த வெறி -- பயங்கரமான ஆயுதமேந்தித் தாக்குதல்

### அண்ணா மன்றத்துக்குத் தீ -- கழகத்தவர்களின் வீடுகள்மீது தாக்குதல் -- ஒரு பெண்மணிக்குக் கத்திக்குத்து

சிவகங்கை, ஆக. 1—
சிவகங்கைக்கு அருகிலுள்ள குமாரப்பட்டியில், கழகச் செயல்வீரர் முத்துவை வலது கம்யூனிஸ்டுகள் வெட்டிக் கொன்றிருக்கின்றனர், மற்றும் 12 கழகத் தோழர்கள், வலது கம்யூனிஸ்டுக் கட்சியினரின் வன்முறை வெறியாட்டத்துக்கு இலக்காகிப் படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்: அவர்களுள் மூவர் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

**மதுரை மாவட்ட மாநாட்டுக்கு செல்வது பற்றி ஆலோசிப்பதற்காக அண்ணா மன்றத்தில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், வலது கம்யூனிஸ்டு வெறியர்கள், அரிவாள் – கத்தி– வேல்கம்பு முதலிய பயங்கர ஆயுதங்களுடன் சென்று கழகத் தோழர்களைத் தாக்கியிருக்கின்றனர்.**

**பலத்த தாக்குதலுக்குள்ளான தோழர் முத்து அந்த இடத்திலேயே மாண்டார். தாக்குதலுக்குள்ளான மற்றத் தோழர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.**

மதுரை மாநாட்டுக்குப் போவது பற்றி ஆலோசனை நடத்திய அக்கூட்டம் அமைதியாக நடந்து கொண்டிருந்தபோது, வேல் கம்பு -- அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் சிலர் திரளாக வந்து மன்றத்தினுள் நுழைந்தனர்; அங்கிருந்த தி. மு. கழகத் தொண்டர்கள்மீது பயங்கரத் தாக்குதல் நடத்தினர்.

இதனால் கழகத் தோழர் முத்துவின் கை மற்றும் உடலின் பல பகுதிகளில் வேல் கம்பு குத்தி விழுந்தது; இரத்தம் கொட்டிய நிலையில் அவர் அந்த இடத்திலேயே வீழ்ந்து மாண்டார்.

இந்தத் தாக்குதலால், மேலும் 12 கழகத் தோழர்கள் படுகாயமடைந்து அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்; அவர்களில் சீனிவாசன் உட்பட மூவர் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது.

தாக்குதல் நடத்திய கூட்டத்தினரால் அண்ணா மன்றம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது; அங்கிருந்த அண்ணா -- கலைஞர் ஆகியோர் படங்களும், கழகக் கொடியும் அவர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

பின்னர் அந்தக் கூட்டம் குமாரப்பட்டி தி. மு. கழகச் செயலாளர் சோனையின் வீட்டுக்குச் சென்று கல்வீச்சு நடத்தினர்; இதனால் அவர் வீட்டு ஓடுகள் நாசமாயின.

இராமநாதபுரம் மாவட்டப் போலீசு சூப்பிரண்டெண்டு செல்வராஜ் நேரில் சென்று தாக்குதல் நடந்த இடங்களைப் பார்வையிட்டார்.

மேலும் அங்கே எவ்விதமான அசம்பாவிதங்களும் நடக்காதபடி ஆயுதப் போலீசார் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்தப் பயங்கரத் தாக்குதலை நடத்தியவர்கள் வலது கம்யூனிஸ்டுகளேயாவர்.

இது குறித்துப் போலீசார் ஒரு வழக்குப் பதிவு செய்து குமாரப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் வி. ஆர். அய்யாத்துரை உட்பட 35 வலது கம்யூனிஸ்டுகளைத் தேடிவருகிறார்கள்.

படுகாயமுற்ற கழகத் தோழர்கள் வருமாறு:—

முனியாண்டி (28)
சீனிவாசன் (45)
இராமன் (25)
கருப்பையா (55)
பெரியய்யா (30
காவேரி அம்மாள் (40)
இராமசாமி (32)
மாயழகு (31)
செழியன் (31)
ஆண்டியப்பன் (20)
சோனை (30)
இராமன் (27)

இவர்கள் அனைவரும் சிவகங்கை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## சவ ஊர்வலம்

கொலையுண்ட தோழர் முத்துவின் ஊர்வலம் சிவகங்கையில் நடைபெற்றது; அவரது உடல் கறுப்பு-சிவப்புக் கொடியால் மூடப்பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான பெண்களும்-- மாணவர்களும் -- கழகத்தோழர்களும் கறுப்புச்சின்னம் அணிந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் சேதுராமன், திருஞானம் எம்.எல்.சி., சிவகங்கை நகராட்சித் தலைவர் சாத்தையா, நகரச் செயலாளர் திருஞானம் ஆகியோர் ஊர்வலத்தை நடத்திச் சென்றனர்.

ஊர்வலத்தின் இறுதியில் அனுதாபக் கூட்டம் திருஞானம் எம்.எல்.சி. தலைமையில் நடைபெற்றது.

# கழகத் தொண்டரைக் கொன்றவர்களுக்குத் தண்டனை

## இருவருக்குத் தூக்கு -- நால்வருக்கு 2 ஆண்டுக் கடுங்காவல்

### பறங்கிமலைத் தொகுதிக் கலவர வழக்கில் தீர்ப்பு

செங்கற்பட்டு, ஆக. 2—
புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களின் பறங்கிமலைத் தொகுதியில், கழகத் தொண்டரைக் கொலை செய்தவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு நடந்த தேர்தலின்போது பறங்கிமலைத் தொகுதியில் உள்ள புழுதிவாக்கம் கிராமத்தில் இரண்டு கோஷ்டிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது; அதில், தி. மு. கழகத் தொண்டர் ஜின்னு என்ற வெங்கடசாமிக்கு (வயது 32) கத்திக்குத்து விழுந்தது. பலத்த காயமடைந்த அவர் மருத்துவமனையில் மரணமடைந்தார்.

ஜின்னுவைக் கொலை செய்ததாக வேலாயுதம்—சுந்தரம்--சுப்பிரமணியம்—பொன்னுசாமி — இராசகோபால்—நடராசன் உட்பட 21 பேர்களைப் போலீசார் கைதுசெய்து செங்கற்பட்டு, செஷன்சு நீதிபதி முன் வழக்குத் தொடர்ந்தனர்.

மாவட்ட செஷன்சு நீதிபதி எஸ். சூரியமூர்த்தி வழக்கை விசாரித்து நேற்று தீர்ப்புக் கூறினார்.

வேலாயுதம் — சுந்தரம் ஆகிய 2 பேர்களுக்கும் தூக்குத் தண்டனையும், சுப்பிரமணி—பொன்னுசாமி-- இராசகோபால்—நடராசன் ஆகிய 4 பேர்களுக்குத் தலா 2 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்; மீதி 15 பேர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

குற்ற ஆய்வு இரகசியப் போலீசு சூப்பிரண்டெண்டு ஞானசம்பந்தம் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர் இலட்சுமி நரசிம்மன் இந்த வழக்கு பற்றி விசாரணை நடத்தினர்.

# விவசாயி சங்க வேட்பாளர்கள் படுதோல்வி

## கோவை மாவட்ட ஊராட்சி தேர்தல்களில் கழகம் பெற்ற வெற்றி

கோவை, ஆக. 2
வெள்ளைமடை ஊராட்சி மன்றத் தேர்தலில் கழகத் தோழர் குமாரசாமி விவசாய சங்க வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

நாயக்கன்பாளையம், கோடனூர், ராக்கியபாளையம் ஆகிய ஊராட்சி மன்றங்களின் இடைத் தேர்தல்களில் கழகத் தோழர்கள் மூவரும் வெற்றிபெற்றனர்.

எதிர்த்துப் போட்டியிட்ட விவசாய சங்கத் தலைவர்கள் தோல்வியடைந்தனர்.

## பாகிஸ்தான் போர்க் கைதிகட்கு ரூ. 4,50,58,000 செலவு

புதுடில்லி, ஆக. 2—
வங்காள தேசத்தில் இந்திய இராணுவத்திடம் சரணடைந்த பாகிஸ்தான் இராணுவத்தினர் ஏறத்தாழ 93,000 பேர் போர்க் கைதிகளாக இந்தியச் சிறைகளில் இருக்கின்றனர்.

இவர்கட்கு வேண்டிய உணவு -- உடை ஆகியவற்றை இந்தியா வழங்கிவருகிறது; இராணுவ அதிகாரிகட்கு, சௌகரியமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"இவர்களுக்காக, இதுவரை எவ்வளவு பணம் செலவாகியிருக்கிறது" என்று நாடாளுமன்ற மேலவையில், வி. சத்தியநாராயணன் என்ற உறுப்பினர் கேட்டார்.

இதற்கு, இராணுவ அமைச்சர் ஜெகஜீவன்ராம் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"1971 சூன் 30-ம் நாள் முடிய பாகிஸ்தான் போர்க் கைதிகளுக்காக ரூ. 4,50,58,000 செலவாகியிருக்கிறது" என்று தெரிவித்தார்.

## அரசு ஊழியர் ஊதியம்

### ஒரு நபர் குழுவின் பரிந்துரை

சென்னை, ஆக. 2—
இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் காரணமாகத் தமிழ்நாடு என்.ஜி.ஓ.-வினரில் சில பிரிவினருக்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகளைக் களைவதற்காகத் தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் சபாநாயகம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு நபர் குழு, அடுத்த வாரம் தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை அரசிடம் அளிக்கும்.

## பஸ் முதலாளிகள் அப்பீல்-- தலைமை நீதிமன்றம் நிராகரிப்பு

புதுடில்லி, ஆக. 2—
சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்து கொள்வதற்கு ரங்க விலாஸ் மோட்டார் சர்வீசு நிறுவனத்துக்கும் -- மற்றும் 18 தனியார் பஸ் நிறுவனங்களுக்கும் தலைமை நீதிமன்றம் அனுமதியளிக்க மறுத்தது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான பஸ் ரூட்டுகளை தமிழ்நாட்டில் அரசுடைமையாக்கப்பட்டதை அடுத்து இந்நிறுவனங்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன; இம்மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

# மதுரை மாநாட்டு ஊர்வலம்

## தொண்டர் படைத் தலைவர் அறிவிப்பு

மதுரை மாவட்ட தி. மு. கழக ஐந்தாவது மாநாட்டையொட்டி 4-8-72 அன்று நடைபெறும் மாபெரும் ஊர்வலத்தில், முதலில் விவசாயிகள் மாட்டு வண்டிகளில் அணிவகுத்து வருவர்; திறந்த காரில் தொண்டர் படைத் தலைவர்கள் ஊர்வலத்தைக் கண்காணித்து வருவர்; அப்பொழுது நேர்முக வர்ணனையும் இருக்கும்.

மோட்டார் சைக்கிள்களில் தொண்டர்கள் அணிவகுத்து வருவர்; அடுத்து, கழகத் தோழர்கள் -- தோழியர்கள் நடந்து வருவார்கள்; இடையிடையே பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

அடுத்து, சைக்கிள்கள்--சைக்கிள் ரிக்‌ஷாக்கள் அணியணியாக வரும்.

டிராக்டர்கள்--பஸ்கள்--லாரிகள் ஆகியவையும் அணிவகுத்துப் பின்தொடரும்.

மேற்கண்ட முறையில் அனைவரும் ஊர்வலத்தில் பங்கு கொள்ளுமாறு தொண்டர் படைத் தலைவர் பொன். முத்துராமலிங்கம் கேட்டுக்கொள்கிறார்.

# பிறந்த மண்ணுக்கு நன்றியுடன் நடந்துகொள்வோம்

## மக்களுக்கு நேர்மையுடன் பாடுபடும் கட்சி தி.மு.க.

### கருநாடகச் சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் திராவிடமணி விளக்கம்

பெங்களூர், ஆக. 2—

"நாங்கள் இங்கு பிறந்தோம் -- இங்கு வாழ்கிறோம் -- இங்கு தான் இறக்கப்போகிறோம்.

"நாங்கள் இந்த மண்ணுக்கு விசுவாசமாக நடக்கிறோம்; அவசியம் ஏற்படின், கன்னட மக்களின் வாழ்வு வளம் பெற எங்கள் உயிரையும் தரத் தயாராக இருக்கிறோம்"

என்று, கருநாடக மாநிலச் சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் திராவிடமணி குறிப்பிட்டார்.

கடந்த 19—7—72 அன்று திரு. சாமண்ணா என்பவரால் குடிசை ஒழிப்புக் குறித்துக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து, தோழர் திராவிடமணி பேசிய கன்னிப் பேச்சு வருமாறு:—

"பெங்களூர் நகரிலுள்ள குடிசைகளைச் சீர்திருத்த இதுவரையில் பெங்களூர் மாநகராட்சி மன்றம் ரூ 4 இலட்சம் செலவு செய்திருக்கிறது; தார் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன; விளக்குகள் போடப்பட்டுள்ளன; கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன; ஆயினும் அவர்களது கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

எனவே, அவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் உடனடியாகச் சென்னையைப் போன்று குடிசை மாற்று வாரியத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திரா காங்கிரசு உறுப்பினர் சீராமுலு பேசுகையில், 'நாங்கள் கருநாடக உணவைக் கொடுக்கிறோம்; தண்ணீரைக் கொடுக்கிறோம்; நிலத்தைக் கொடுக்கிறோம்' என்று கூறினர்; இத்தகைய பேச்சுக்கள், சிறுபான்மையினருக்குக் கேட்டினையே உண்டாக்கும்; குடிசைவாசிகளாகப் பிறந்த அவர்களுக்கும் மற்றவர்களைப்போல் நிலம் -- நீர் -- உணவு பெறுவதற்குச் சட்டப்படி உரிமை இருக்கிறது.

மற்றொன்றையும் அவர் குறிப்பிட்டார்; 'தேர்தல் காலங்களில் குடிசைவாசிகளின் கைகள் கருணாநிதியின் கொடிகளைப் பறக்கவிடுவதாகவும், தேர்தல் முடிந்த பிறகு காங்கிரசுக் கொடிகளைப் பறக்கவிடுவதாகவும் குறிப்பிட்டார்.

இது உண்மைக்குப் புறம்பானதாகும்; இப்போதும் அவர்கள் கருணாநிதியின் கொடியைத் தான் பறக்கவிட்டிருக்கிறார்கள்.

ஒரு சனநாயக அமைப்பில் தாங்கள் விரும்பும் கொடியைப் பறக்கவிடுவிதற்கு அவரவர்கட்கும் உரிமையுண்டு; இன்று, அவருக்கும் -- அவரது கட்சியினருக்கும் கருணாநிதியின் கொடி பிடிக்காமலிருக்கலாம்; ஆனால், இந்தக் கருணாநிதி கொடியின் ஆதரவோடுதான் அனுமந்தையா நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; இந்தக் கருணாநிதி கொடியின் ஆதரவோடுதான் பெங்களூர் மாநகராட்சி மன்றம் இயங்குகிறது; உண்மை இவ்வாறிருக்க, தி. மு. கழகத்தைக் குறைகூறுவானேன்?

பெங்களூரில் குடிசைகள் பெருகுவதற்கு நாங்கள் காரணமல்ல; ரூ. 180 இலட்சம் செலவில் குடிசை ஒழிப்புக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது; இந்தத் துவக்கத் திட்டம் செயற்குழுவின் தலைவனான என்னுடைய தலைமையில் பெங்களூர் மாநகராட்சி மன்றத்தில் நிறைவேறியுள்ளது; எனவே, குடிசை பெருகுவதற்கு நாங்கள் காரணமல்ல.

கருநாடக மக்களுக்கு நேர்மையாக -- தூய உள்ளத்தோடு பாடுபடும் கட்சி தி. மு. கழகம்; இதற்கு ஓர் சிறிய உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்; சிண்டிகேட் கட்சி தன்னுடைய கட்சியின் பெயரை, 'கருநாடகக் காங்கிரசு' என்று மாற்றிக்கொள்ள சென்ற மாதம்தான் முடிவு செய்தது; ஆனால், 1958-ம் ஆண்டுமுதல் எங்கள் கட்சியின் பெயர், 'கருநாடக மாநிலத் தி. மு. கழகம்' என்ற பெயராலேயே இயங்கி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."

# அமெரிக்கத் தேர்தலில் புதிய சிறப்பு

## 2.50 கோடி இளைஞர்கள் புதிய வாக்காளர்கள்

வாஷிங்டன், ஜுலை 31—

அமெரிக்காவில் இவ்வாண்டு நவம்பரில் நடைபெறும் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஒரு சிறப்பு இருக்கிறது; 18 வயது ஆகிவிட்ட இளைஞர்கள் தேர்தலில் கலந்து கொள்வார்கள்; அவர்களுக்கு வாக்குரிமை உண்டு.

அப்படிப் புதிதாக வாக்களிக்கவிருக்கும் இளைஞர்கள் இரண்டரைக் கோடி பேர்கள்; இவர்களில் 30 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்; 65 இலட்சம் பேர் கல்லூரி மாணவர்கள்; எனவே, 'அதிபர் பதவிக்கும் -- பிற பதவிகளுக்கும் நவம்பர் மாதம் நடக்கும் தேர்தல்களில் இளைஞர் வாக்குகள் இரண்டில் ஒன்று பார்த்துவிடும்' என்று பலர் எண்ணுவதில் வியப்பில்லை.

அமெரிக்க அரசியல் சட்டத்தின் 26-வது திருத்தம், 18 வயதாகிவிட்ட இளைஞர்களுக்கு வாக்குரிமை வழங்கியுள்ளது; 1971 ஜுன் மாதம் இந்தத் திருத்தம் செயலுக்கு வந்தது; முன்னர் வாக்குரிமை வயது 21 ஆக இருந்தது.

'இளைஞர்கள் தேர்தலில் எங்கே அக்கறை காட்டப்போகின்றனர்' என்று எண்ணியவர்களும் உண்டு; ஆனால், அவர்கள் போட்டது தப்புக் கணக்கு என்று இளைஞர்கள் -- குறிப்பாகக் கல்லூரி மாணவர்கள் -- காட்டிவிட்டனர்; புதிய உரிமை ஒன்று தங்களுக்குக் கிடைத்ததிலே அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சி அதனை அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர் -- அதிபர் தேர்தலில் பயன்படுத்தவும் போகின்றனர்.

### மதுரை மாநாட்டு ஊர்வலம்

#### அண்ணா பேரவை அணிவகுப்பு

சென்னை, ஆக. 1—

4—8—72-ல் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு ஊர்வலத்தில் -- அண்ணா பேரவையின் சார்பில் 500 பேர் வெள்ளை முழுக்கால் சட்டையும் -- வெள்ளைச் சட்டையும் அணிந்து, அண்ணா பேரவைத் தலைவர் துரை. எழில்விழியன் தலைமையில் அணிவகுத்துச்செல்வர்.

# மாற்றாருக்கு ஏற்பட்டுள்ள தீராத வியாதி

குமாரபாளையம், ஜுலை 31—

"குமாரபாளையத்தில் 15,000 பேருக்கு டாக்டர் வெங்கடசாமி சிகிச்சை அளித்தார்; அவர்களெல்லாம் கண்பார்வை பெற்றனர்.

"ஆனால் இதே குமாரபாளையத்தில் நடக்கும் விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கோலாகலமாகக் கலந்துகொள்வதைப் பார்த்த பிறகும், தி. மு. கழக அரசுக்குச் செல்வாக்கில்லை -- தி. மு. கழகம் மக்கள் ஆதரவை இழந்துவிட்டது -- அமைச்சர்கள் பேசினால் ஆட்களே வருவதில்லை' என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள்!

'அப்படிப்பட்டவர்களுக்குக் கண்பார்வை தர எத்தனை டாக்டர் வெங்கடசாமிகள் வந்தாலும் நடக்காது; 'அது குணமாகாத வியாதி' என்று மக்களே விட்டுவிட்டார்கள்!"

-- முதலமைச்சர் கலைஞர்

(குமாரபாளையம் கூட்டத்தில்)

# கண்ணொளி வழங்கும் சீரிய பணி

## தொடர்ந்து நடந்திட நன்கொடை தாரீர்!

### அறநிலையங்கட்கு அமைச்சர் அன்பழகன் வேண்டுகோள்

விருத்தாசலம், ஆக. 2

"தமிழ்நாட்டில் கண் பார்வை இழந்தவர்களுக்கு இலவசச் சிகிச்சை அளிக்க அடுத்த ஆண்டில் ரூ 1-கோடி செலவிடப்படும்"

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

தென் ஆற்காடு மாவட்டம் மணவாளநல்லூர் கொளஞ்சியப்பன் கோவிலில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நிறைவு நாள் விழாவில் அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் கலந்துகொண்டு -- நோயாளிகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:—

"இயன்ற வரையில் ஏழைகளுக்காகப் பணியாற்ற வேண்டும் -- அவர்களின் இன்னலைக் களைய வேண்டும் என்ற கலைஞரின் திட்டத்தையொட்டி -- நிதிப் பற்றாக்குறை இருப்பினும் -- கண் சிகிச்சைத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம்.

இந்த ஆண்டு ஓர் இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்துவது என முடிவு எடுத்துச் செயல்படுகிறோம்; இதற்கு ஏறத்தாழ ரூ 60 இலட்சம் செலவாகும்; அதே சமயம் 5 இலட்சம் பேருக்குக் கண் பரிசோதனை போன்ற மற்ற சிகிச்சைகளைச் செய்ய வேண்டியுள்ளது; இதற்கு ரூ 5-இலட்சம் செலவு ஆகும்.

எனவே, இந்த அடிப்படையில் பார்த்தால் அடுத்த ஆண்டில் ஏறத்தாழ ரூ. 1-கோடி செலவாகும்.

இந்த நல்ல திட்டத்திற்குக் கோவில்கள் -- அறநிலையங்கள் போன்றவை தொடர்ந்து நிதியுதவ வேண்டும்; 'சமுதாயப் பணியிலே இது சிறந்த தொண்டு' என்பதை உணர்ந்து இதற்கு நல்ல ஆதரவு தரவேண்டும்."

விழாவுக்கு விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம். செல்வராசு தலைமை தாங்கினர்.

இந்தச் சிகிச்சை முகாமில் ஆண்கள் 2,867 பேர் -- பெண்கள் 1733 பேர் -- ஆண், பெண் குழந்தைகள் 135 பேர் -- ஆக 4,735 பேர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது.

கண்ணில் புரை அறுவைச் சிகிச்சை (262 ஆண்கள் — 275 பெண்கள்) ஆக 537 பேர்களுக்கு செய்யப்பட்டது.

510 பேர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை அமைச்சர் வழங்கினர்.

"சிகிச்சை முகாமுக்காகக் கொளஞ்சியப்பர் கோவில் சார்பில் முன்பே ரூ 12,000 நிதி வழங்கப்பட்டிருக்கிறது; மேற்கொண்டு உணவு வகை செலவுக்காக ரூ. 8,000 கோவில் சார்பில் செலவிடப்பட்டது; என்று கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜி ராமதாஸ் வரவேற்புரையில் கூறினர்.

அமைச்சருக்குக் கோவில் அறங்காவலரும் -- வழக்கறிஞருமான டி. எஸ். முருகேசன் வரவேற்பு இதழ் வாசித்து அளித்தார்.

டாக்டர் வைத்தியநாதன் அறிக்கை படித்தார்; தமிழ்நாட்டில் இது 49 வது சிகிச்சை முகாம் எனவும், தென் ஆற்காடு மாவட்டத்தில் இதுவரையில் மூன்று முகாம்களில் 13,000 பேர்களுக்கு சிகிச்சையும், 1,275 பேர்களுக்கு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மற்றும் நல்லூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் அர. இலக்குமணன், மங்களூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெயமாலை, அறநிலையத்துறை துணை ஆணையர் ஏ. வெங்கடாசலம் ஆகியோர் பேசினர்.

கோட்ட ஊராட்சி அதிகாரி நாகமுத்து நன்றி கூறினர்.

# மதுவிலக்கு பிரசாரக் குழு

## மாவட்டங்கள்தோறும் பிரசாரம் துவங்க ஏற்பாடு

சென்னை, ஜுலை 31—

தி. மு. கழகத்திற்கும் -- கழக அரசுக்கும் உயிர்க் கொள்கையான 'மது அருந்தக்கூடாது' என்ற இலட்சியத்தைத் தமிழக மக்களிடம் எடுத்துக் கூறுவதோடு, தமிழக மக்கள் மதுவின் தீமையைப் புரிந்துகொண்டு மது அருந்ாதவர்களாகவும் -- மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துபவர்களாகவும் உருவாகக் கழகத் தலைவர் அவர்களாலும், பொதுச்செயலாளர் அவர்களாலும் அமைக்கப்பட்ட மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக் கூட்டம், 30—7—72 காலை 10-30 மணியளவில், சென்னை -- அண்ணா சாலை தி. மு. க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில், குழுத் தலைவர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

குழுவின் சீரிய நோக்கத்தையும் -- அந்தம் சிறப்பாக நிறைவேறுவதற்கான வழி முறைகள் குறித்தும் குழுத் தலைவர் -- புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கூட்டத்தில் விளக்கினர்.

குழுத் தலைவர் தெரிவித்த கருத்தினைத் தொடர்ந்து உறுப்பினர்கள் அனைவரும் தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியாகக் கீழ்க்காணும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

"மாவட்டந்தோறும் உடனடியாக மதுவிலக்குப் பிரசாரக் குழு அமைப்பதற்காக அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் கலந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க திரு. சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.—திரு. டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி.— திரு. சா. கணேசன் எம்.சி. —திருமதி பொற்செல்வி இளமுருகு ஆகிய உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை இக்கூட்டம் அமைக்கிறது.

"இந்தக் குழு, மாவட்டக் கழகச் செயலாளர்களோடு தொடர்பு கொண்டு -- நாள் மற்றும் அது சம்பந்தமான விவரங்களைக் குறிப்பிட்டுத தனது பணியைத் துவக்கும்.

"இக்குழுவிற்குத் தற்காலிக அமைப்பாளராகத் திரு. சா. கணேசன் எம்.சி. அவர்களை இக்குழு தேர்ந்தெடுக்கிறது."

### சென்னை நிறுவனத்துக்கு அமெரிக்க அரசு கடன் அளிக்கிறது

புதுடில்லி, ஜுலை 31—

ஒரு சென்னை நிறுவனத்துக்கு அதன் மோட்டார் டயர் -- டியூப் உற்பத்தியைப் பெருக்க அமெரிக்க அரசு ஒரு கோடி ரூபாய் கடன் உதவுகிறது.

ஆண்டுக்கு 2,60,000 யூனிட் உற்பத்தி செய்து வந்த சென்னை நிறுவனம் இனி 6,10,000 யூனிட் உற்பத்தி செய்யும்படியாகத் தனது தொழிற்சாலையை விரிவுபடுத்தும். டயர் உற்பத்திக்கு ஆதாரமான கலவை கச்சா ரப்பர் -- லிதகார்பன் பிளாக் மற்றும் இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்யவும் ஒரு தொழிற்சாலை நிறுவும்.

# முன்னேற்றத் திட்டங்களுக்காகப் பெற்ற பணம் முடங்கிக் கிடக்கிறது

## பெற்ற பணத்தை முழுமையாக செலவு செய்யத் தவறிவிட்டனர்

### மத்திய அமைச்சுத் துறைகளின் மந்தப்போக்கு-உலக பாங்கி அதிருப்தி

புதுடில்லி, ஆக. 2—

கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு மாநிலங்களில் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இதுவரை உலக பாங்கி மொத்தம் ரூ. 32.40 கோடி டாலர் (ரூ. 236.4 கோடி) அளித்துள்ளது; இதில் 6 சதவிகிதத்தையே மத்திய வேளாண்மை அமைச்சகமும் -- மின்சார, பாசன அமைச்சகமும் பயன்படுத்தியிருக்கின்றன.

இவ்விரு அமைச்சகங்களும் 1.79 கோடி டாலர் மட்டுமே (ரூ. 13.07 கோடி) செலவிடப்பட்டுள்ளதாகவும், இன்னமும் சுமார் 30.6 கோடி டாலர் (223.38 கோடி) பயன்படுத்தப்படாமல் இரு அமைச்சகங்களிடமும் உள்ளன என்றும் அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

1969 ஜுன் திங்களுக்குப்பின் அனுமதிக்கப்பட்ட உலக பாங்கி கடன் தொகைகள் -- கடன் வசதி -- மார்க்கெட் வசதி -- பாசன, விவசாய மேம்பாடு -- விதை மேம்பாட்டுத் திட்டம் போன்றவற்றிற்காக வழங்கப்பட்டவையாகும்.

திட்டங்கள் செயல்படும் விதம் பற்றி அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனை, வேளாண்மைத் துறைக்கும் -- பொருளாதார விவகாரத் துறைக்கும் -- உலக பாங்கிக்குமே பெரும் கவலையைத் தந்திருக்கிறது.

திட்டங்களின் செயற்பாட்டு முன்னேற்றம் மிகவும் அதிருப்திகரமாக இருப்பது இப்பரிசீலனையின் மூலம் தெரிய வந்துள்ளது; இந்தத் திட்டங்களின் செயல்பாடு மிகவும் மோசமாக இருப்பதால் அனைத்து நாட்டு மேம்பாட்டுச் சங்கத்தின் கடனுதவி விநியோகமும் மிகவும் குறைவாகவே இருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு 1961 ஜுன் திங்களில் 3.50 கோடி டாலர் (ரூ. 25.55 கோடி) தரப்பட்டது; இந்தத் தொகை விநியோகிக்கப்படவே இல்லை.

# தனியார் பள்ளிகள்

## செம்மையாக நடைபெற நடவடிக்கை

சென்னை, ஆக. 1—

அரசு உதவிபெறும் தனியார் துவக்க -- நடுத்தர உயர்நிலைப் பள்ளிகள் நன்கு நடைபெற நிர்வாகம் -- ஆசிரியர்கள் -- பெற்றோர்கள் ஆகியோர் பிரதிநிதிகளும், தலைமை ஆசிரியரும் கொண்ட நிர்வாகக் குழுக்களை இனி நியமிக்க வேண்டியிருக்கலாம்.

தற்போது உதவிபெறும் 5,205 துவக்கப் பள்ளிகளும், 2,052 நடுத்தரப் பள்ளிகளும், 850 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்ற ஊழியர்களின் வேலை நிலையை ஒழுங்குபடுத்தத் தற்சமயம் சட்டமில்லை; அவர்களின் வேலையைப் பாதுகாக்க அரசு விரும்புகிறது.

தனியார் பள்ளி ஏதாவது மூடப்படுமானல், அதற்குத் தக்க காரணங்கள் இருக்கவேண்டும் என்றும், மூடப்பட்ட பிறகு மாணவர்களின் கல்வி நீடிக்கப் போதிய ஏற்பாடு இருக்கவேண்டும் என்றும் அரசு விரும்புகிறது.

### பி.காம். -- எம்.காம். இடங்கள் அதிகரிப்பு

#### நாவலர் தகவல்

சென்னை, ஆக. 1—

"இந்த ஆண்டில் 'பி.காம்.' வகுப்புகளும் -- இடங்களும் அதிகரித்திருக்கிறோம்; ஆனால், அதற்குப் போதிய அளவில் 'எம்.காம்.' ஆசிரியர்கள் கிடைக்கவில்லை; ஆகவே, 'எம்.காம்.' படிப்பதற்கான இடங்களும் அதிகரிக்கப் பட்டிருக்கின்றன"

என்று, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# சென்னை நகருக்குச் சுரங்க இரயில் பாதை

## திருவொற்றியூர் -- திருவான்மியூர் இடையே அமைக்க யோசனை

சென்னை, ஆக. 2—

சென்னை நகரில் திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூருக்குத் தரைக்கு அடியில் சுரங்க இரயில் விடுவதற்கான ஒரு திட்டம் பற்றி திட்டக் குழு அதிகாரிகள் -- இரயில்வே அதிகாரிகள் -- தமிழக அரசு அதிகாரிகள் ஆகியவர்கள் விவாதித்து வருகிறார்கள்.

"சென்னை நகரின் மக்கட் தொகை பெருகிக் கொண்டே போகிறது; கல்லூரி மாணவர்களும் -- அரசு ஊழியர்களும் -- நிறுவனங்களில் பணியாற்றுபவர்களும் -- தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களும் -- மற்றவர்களும் தமது அன்றாடப் பயணத்திற்குத் தற்போது பஸ்களையே பெரும் அளவில் பயன்படுத்துகிறார்கள்; பஸ்களில் கூட்டம் அதிகமாகிக் கொண்டே போகிறது; இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண சுரங்க இரயில் மிகவும் உதவிகரமாக இருக்கும்" என்று தமிழ்நாடு அரசு அதிகாரிகளும் -- திட்டக் குழு அதிகாரிகளும் கருதுவதாகத் தெரிகிறது.

மயிலாப்பூர் -- அடையாறு -- திருவான்மியூர் போன்றவை மக்கள் அதிகமாகக் குடியிருக்கும் பகுதிகளாகும்; அவை ஒரு முனையிலும் -- தொழிற்சாலைகள் ஏராளமாக ஏற்பட்டுவரும் திருவொற்றியூர் பகுதி மற்றொரு முனையிலும் உள்ளது; இந்த நிலையில், இரு பகுதிகளையும் இணைக்க சுரங்க இரயில் இன்றியமையாதது என்று கருதப்படுகிறது.

திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூருக்கு அமைக்கப்படும் சுரங்க இரயில், ஜார்ஜ் டவுன் -- அண்ணா சாலை -- மயிலாப்பூர் -- அடையாறு வழியாகச் செல்லும்.

நிதி சம்பந்தமான சிக்கலோ அல்லது பிற தடையோ ஏற்படவில்லை என்றால், இந்தச் சுரங்க இரயில் பாதை அமைக்கும் பணி ஒரிரு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும், ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

இரண்டு மார்க்கங்களில் பாதாள இரயில் பாதை அமைக்கலாம்; பக்கிங்காம் கால்வாய் வழியாகச் செல்லும் மார்க்கம் ஒன்று; திருவொற்றியூர் நெடுஞ்சாலை -- பிராட்வே -- அண்ணா சாலை -- இராயப்பேட்டை நெடுஞ்சாலை -- அடையாறு பாலம் ஆகியவற்றின் வழியாகச் செல்லும் மார்க்கம் மற்றொன்று; இவற்றில் எந்த மார்க்கத்தில் பாதாள இரயிலை அமைப்பது என்பதைத் தமிழ்நாடு அதிகாரிகள் முடிவு செய்ய விடப்பட்டுள்ளது.

இலண்டனிலும் -- உலகின் இதர முக்கிய நகரங்களிலும் சுரங்க இரயில்கள் அமைக்கப்பட்டுள்ளன; அவற்றைப் போலவே இங்கும் அமைக்கப்பட வேண்டியிருக்கும்; அதாவது, சுரங்க இரயில் பாதை முழுவதும் தரைக்கு அடியில் செல்லுவதாக இராது; மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் இரயில் பாதை பூமிக்கு அடியில் செல்லும்; பூமிக்கு அடியில் இரயில் பாதை அமைக்க வழியில்லாததும் -- அகலமான சாலைகள் உள்ளதுமான பகுதியில் பூமிக்கு மேல் அமைக்கப்படும்; சாலையில் பெரிய தூண்களின்மீது இரயில் பாதை உயரமாக அமைக்கப்படும்.

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சிக்காக ஒரு திட்டத்தை தமிழ்நாடு அரசு தயாரித்திருக்கிறது; இத்திட்டத்தின் அடிப்படையில் போக்குவரத்து வசதிகள் அளிக்க எட்டு இடைவழிகள் வகுக்கப்பட்டுள்ளன.

ஜார்ஜ் டவுன் பகுதி மையப் பகுதியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது; அங்கிருந்து பல்வேறு திசைகளில் ஐந்து இடைவழிகள் செல்கின்றன; மூன்று வட்டப் பாதைகள் இந்த இடைவழிகளை இணைக்கின்றன; இந்த எட்டுப் பாதைகளிலும் போக்குவரத்து வசதிகள் விரிவு பெறுவது அவசியம்.

இவற்றில் திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூருக்கு ஒரு இடைவழி செல்கிறது; இங்கு, சாலைகளை விரிவுபடுத்த வாய்ப்பு இல்லை; எனவே, பாதாள இரயில் அமைப்பதைத்தான் இங்கே மேற்கொள்ள வேண்டும்.

ஒரு சுரங்க இரயிலில் ஒரே நேரத்தில் சுமார் 2,500 பேர் பயணம் செய்யலாம்; எனவே, போக்குவரத்தும் பிரச்சினை தீர சுரங்க இரயில் உதவிகரமாக இருக்கும். கல்கத்தா நகரில் ரூ. 140 கோடி செலவில் சுரங்க இரயில் அமைப்பதற்கான திட்டம் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுள்ளது; அதேபோல் சென்னை நகரிலும் சுரங்கஇரயில் அமைக்க மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதில் சிரமம் இராது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சென்னை எஸ்.ஐ.எப். தொழிற்சாலை திறக்கப்படுகிறது

## தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் மகத்தான சாதனை

### நான்கு மாதகால அமைதியான போராட்டம் பெற்றுத்தந்த வெற்றி

சென்னை, ஆக. 2—

சென்னை -- இராயபுரத்திலுள்ள எஸ். ஐ. எப். மில்ஸ் என்னும் தொழிற்சாலையில் ஏறத்தாழ 300 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தும், தங்களுக்கென ஒரு தொழிற் சங்கம் அமைக்கமுடியாமலிருந்த அவல நிலையை மாற்றி -- சென்ற ஆண்டு இறுதியில் மா. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ தலைமையில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் நிறுவப்பட்டு— முறைப்படி தொழிலாளர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட சில நியாயமான கோரிக்கைகள் மில் நிர்வாகத்தினரிடம் கொடுக்கப்பட்டது.

நிர்வாகம் காலந்தாழ்த்தி தொழிற் சங்கத்துடன் கோரிக்கைகள் பற்றிப் பேச்சுவார்த்தை தொடங்கிற்று; என்றாலும் தொழிற்சங்கம் நேரடிப் பேச்சுவார்த்தையின் மூலம் சுமுகமான ஓர் உடன்பாடு கண்டிட முழு முயற்சி மேற்கொண்டிருந்த நேரத்தில், தொழிற்சாலையில் தகராறுக்குரிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டுத் திடீரென்று சென்ற 9—3—72 அன்று தொழிற்சாலையை மில் நிர்வாகத்தினர் மூடிவிட்டனர்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் அமைதியான வழிநின்று மீண்டும் தொழிற்சாலையைத் திறந்து பாதிக்கப்பட்ட எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலையளிக்கக் கோரியது; துவக்கத்தில் மறுத்து வந்த மில் நிர்வாகத்தினர் பல்வேறு கட்டங்களில் தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற சமரச முயற்சிகளுக்குப் பின்னர் தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில் மீண்டும் தொழிற்சாலையைத் திறக்க ஒப்புக் கொண்டனர்; தொழிலாளர் நல அமைச்சரின் முயற்சி வெற்றி பெற்றது.

அதன் விளைவாகக் கீழ்க்கண்ட அடிப்படையில் தொழிற்சாலையைத் திறந்து நடத்துவதென ஒப்பந்தம் ஆயிற்று:—

ஒப்பந்தப்படி 1—8—72 முதல் தொழிற்சாலை முழு அளவில் தொழிலாளர்களைக் கொண்டும் இயங்கும்.

தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு ரூ. 17.50 ஊதிய உயர்வும், அடுத்த ஆண்டு மேலும் ரூ. 12.50 ஊதிய உயர்வும் அளித்து மொத்தத்தில் அடுத்த ஆண்டு ரூ. 30 ஊதிய உயர்வு தொழிலாளர்கள் பெறும் வகையில் அளிக்கப்படும்.

240 நாட்கள் வேலை செய்த எல்லாத் தொழிலாளர்களும் 1-8-72 முதல் நிரந்தரமாக்கப்படுவர்.

லாரி டிரைவர்கள், 'எஸ்கார்டு'கள் ஆகிய தொழிலாளர்களுக்கும் 'ஓவர் டைம்' சம்பளம் தரப்படும்.

உடனடியாக எல்லாத் தொழிலாளர்களுக்கும் ரூ. 100 முன்பணம் தந்து -- அதை மாதம் ரூ. 5 வீதம் 20 மாதங்களில் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளப்படும்.

இவைபோன்று மற்றும் சில விதிகளும் அடங்கிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மூடப்பட்ட மில் மீண்டும் திறக்கப்படவே முடியாது என்றிருந்த நிலையை மாற்றி, தொழிலாளர் நல முன்னேற்றச் சங்கத்தின் தளராத திட்டமிட்ட முயற்சியின் விளைவாகவும் -- தொழிலாளர்களின் ஒற்றுமையின் காரணமாகவும் -- தமிழக அரசின் தொழிலாளர் நலக் கொள்கையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாகவும் -- வெற்றிகரமானதொரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு எல்லாத் தொழிலாளர்களும் ஊதிய உயர்வு பெற்று மீண்டும் வேலை செய்யும் நல்ல நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நல்ல முடிவினை எஸ் ஐ எப். மில் பெற்றிட உதவிபுரிந்த சகோதர தொழிற்சங்கங்களுக்கும் -- குறிப்பாக விநாயகா ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தொழிலாளர் சங்கத்திற்கும் -- இந்தியா டுபாக்கோ கம்பெனி தொழிலாளர் சங்கத்திற்கும் -- தமிழக அரசுக்கும் -- தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கும், குறிப்பாகத் தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன், அவர்களுக்கும் எஸ். ஐ. எப். மில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் தனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கிளைகளின் தேர்தல்கள்

### திருநெல்வேலி கிளை

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்—திருநெல்வேலி கிளையின் நிர்வாகிகள் தேர்தல், மத்திய சங்கத் துணைத் தலைவர் வி. நம்மாழ்வார் அவர்களை ஆணையாளராகக் கொண்டு 23-7-72-ல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: ஐ. சாமுவேல்; செயலாளர்: கே. லாசர்ஸ்; பொருளாளர்: கே. கே. சாமி; துணைச் செயலாளர்கள்: ஜான்சன் ரஸ்சல், ஆர். இராமச்சந்திரன், எஸ். சுப்பிரமணியன்; பொதுக்குழு உறுப்பினர்: எஸ. செல்லையா; பேரவை உறுப்பினர்கள்: எம். தங்கப்பன், டி. பிச்சையா; மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கூட்டத்தில், கொலையுண்ட பிரதாப் சந்திரன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### செங்கோட்டை கிளை

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்—செங்கோட்டை கிளையின் நிர்வாகிகள் தேர்தல், திரு. வி. நம்மாழ்வார் அவர்களை ஆணையாளராகக் கொண்டு 24-7-72-ல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: எஸ். செல்லத்துரை; செயலாளர்: ஜி. சோமசுந்தரம்; பொருளாளர்: ஏ. வெள்ளைச்சாமி; துணைச்செயலாளர்கள்: ஜி எஸ். நந்தன், எஸ். அப்ரகாம்சாமி, எஸ் செல்லையா தேவர், எம். அய்யாதுரை; பேரவை உறுப்பினர்: ஜே. ஆபிரகாம்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 15-பேர்.

கூட்டத்தில், பிரதாப் சந்திரன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

### திருச்சி கிளை கண்டனம்

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்—திருச்சி கிளையின் சார்பில் 15—7—72-ல் நடைபெற்ற கூட்டத்தில், 'விவசாயிகள்' என்றபெயரால் நடைபெற்ற அர்த்தாலில், பிற்போக்குச் சக்திகளின் வன்முறைச் செயல்களுக்குக் கண்டனம் தெரிவித்தும், உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# புதுக்கோட்டை மத்தியசித்தமருத்துவக் கழகக் கூட்ட முடிவுகள்

புதுக்கோட்டை மத்திய சித்த மருத்துவக் கழகச் செயற்குழுக் கூட்டம் 9—7—72-ல் டாக்டர் ஆர். சௌமிய நாராயணன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, பண்டிட் எஸ். எஸ். ஆனந்தர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மறுபயிற்சி வகுப்புக்களை தொடர்ந்து ஞாயிறு தோறும் பிற்பகல் 3 மணி முதல 5 மணிவரை கழகத் தலைவர் அவர்களால் நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஆர். ஐ. எம். பி. பதிவுக்காக எழுத்துத் தேர்வும் ஏற்படுத்திய நலவாழ்வுத்துறை அமைச்சர் அவர்களையும் -- தமிழக அரசையும் பாராட்டித் தீர்மானங்கள் போடப்பட்டது.

நேர்முகத் தேர்வுகளை மாவட்டங்களிலேயே நடத்திடவேண்டியும், அது பற்றிய நாட்டு மருத்துவத்துறை இயக்குநரின் கடிதத்தைப் பாராட்டியும் -- சித்த மருத்துவ ஆய்வு நிலையத்தினை புதுக்கோட்டையில் நிறுவிடவேண்டியவற்கான காரணங்களையும் அது பற்றி மத்திய அரசின் ஆணையினையும் கருத்திற்கொண்டு மேற்படி கிளை நிறுவனத்தையாவது இங்கு நிறுவிட வேண்டியும்—பிற துறைகட்கு வழங்குவதுபோல் சித்த மருத்துவ ஆய்வுகள் -- கண்டுபிடிப்புகட்கும் பரிசும்—பட்டமும் வழங்கிட மாநில—மத்திய அரசுகளை வேண்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சிதம்பரத்தில் நாவலர் பிறந்த நாள்

23—7—72-ல், சிதம்பரம் டவுன் ஆலில் நகர தி மு. க. சார்பில் நாவலர் பிறந்த நாள் விழா நடைபெற்றது.

திரு லெ. தியாகராசன் தலைமையில், வாண வேடிக்கைகளுடன் விழா தொடங்கியது.

நகர்மன்ற உறுப்பினர்கள் கே. ஆர். கணபதி, கு. பாலசுப்பிரமணியம், சி. பி. கனகசபை, புலவர் முத்து தமிழரசன், பா. சுப்பையன், இரத்தினபாலகுருசாமி, நகர்மன்றத் தலைவர் கோ. துரைராசன், வி. வி சாமிநாதன் எம் பி, பொன் சொக்கலிங்கம் எம்.எல் ஏ. ஆகியோர் பேசியபின், நன்னிலம் நடராசன் நீண்டநேரம் உரையாற்றினர்.

நகரச் செயலாளர் சு. கோவிந்தராசன் நன்றி கூறினர்.

# விருதுநகர் கலைஞர் கருணாநிதி மன்றம்

23—7—72-ல், விருதுநகர் கலைஞர் கருணாநிதி மன்ற உறுப்பினர் கூட்டம் சாத்தூர் வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் என். கே. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது 1972-ம் ஆண்டுக்கான நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: பி. இரத்தினம்; செயலாளர்: எஸ். தனுஷ்கோடி; துணைச் செயலாளர்: ஆர். ஜெயபால்; பொருளாளர்: எம். கருப்பையா; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

சிம்சன் பிரச்சினை :

# ‘அமைதியான உணர்வு அமைவது அவசியம்’

## ‘சுமூகத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை நடைபெறுகிறது’

## ‘இரு சார்புத் தொழிலாளர்களும் விரைவில் நல்ல உடன்பாட்டுக்கு வருவர்’

### முதலமைச்சர் கலைஞர் நம்பிக்கை -- விளக்கம்

சென்னை, ஆக. 2

“சிம்சன் பிரச்சினையில் சுமூகத் தீர்வு காண்பதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

“சிம்சன் தொழிலாளர்களிடையில் ஒற்றுமையை உருவாக்க இராம. அரங்கண்ணல் -- காட்டூர் கோபால் -- வி. பி. சிந்தன் ஆகியோர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்; இரு சார்புடைய தொழிலாளர்களும் -- பேச்சுவார்த்தைக்கெனத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுடன் பேசிக் கொண்டு வருகின்றனர்.

“தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்ட பிறகு, இரு சாராரிடத்திலும் ஓர் அமைதியான உணர்வு அமைந்திட வேண்டும் என்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; இரு சார்புத் தொழிலாளர் நண்பர்களும் நல்ல உடன்பாட்டுக்கு வருவார்கள் என நம்புகிறேன் -- வரவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்”

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் தெளிவுற விளக்கிக் கூறினர்; இத்தொடர்பில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி :—“சிம்சன் பேச்சுவார்த்தை எந்த நிலையில் உள்ளது ?”

முதலமைச்சர் :—“சிம்சன் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிருர்கள்; இன்னும் முடிவாகவில்லை; அவர்கள் பேசி முடிவெடுத்ததும் -- முடிவான பேச்சுவார்த்தையில் நான் கலந்துகொள்வேன்.”

கேள்வி :—“பேச்சுவார்த்தை, சட்டமன்றக் கூட்டம் தொடங்குவதற்குள் முடிந்துவிடுமா ?”

முதல்வர் :—“இந்த வாரம் அல்லது அடுத்த வாரத்திற்குள் முடிவு ஏற்படலாம்; அதுபற்றி வரையறுத்துச் சொல்ல முடியாது.”

கேள்வி :—“இதை, சட்டம் -- ஒழுங்கு பிரச்சினையாகக் கருதி, சிம்சன் தொழிற்சாலையை மத்திய அரசு ஏற்று நடத்த வேண்டுமா என்பது பற்றிப் பரிசீலிக்கப்படுவதாக மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் பேசியிருக்கிருரே !”

முதல்வர் :—“அவர் என்ன பேசினர் என்று நான் பார்க்கவில்லை.”

★

## ‘வேக உணர்வு அவசியமன்று’

## ‘அன்பு வழியிலேயே அமைதி காண்பீர்’

### சிம்சன் தொழிலாளர்கட்கு இராம. அரங்கண்ணல் கனிவுமிக்கவேண்டுகோள்

சென்னை, ஆக. 2—

சிம்சன் தொழிலாளர்களுக்கு இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. (குடிசைமாற்று வாரியத் தலைவர்) விடுத்துள்ள அன்பு வேண்டுகோள் வருமாறு :—

“சிம்சன் தொழிலாளர் மத்தியில் உருவாகியுள்ள நொந்த சூழ்நிலை பற்றித் தி. மு. க. தலைமை நிலையத்தின் விருப்பத்திற்கிணங்க, எல்லாத் தரப்புத் தொழிலாளச் சகோதரர்களையும் கடந்த ஒரு வார காலமாகச் சந்தித்தும் பேசும்வாய்ப்புக் கிடைத்தது.

சிம்சன் தொழிற் சங்கத் துணைத் தலைவர் வி. பி. சிந்தன் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர் பேரவைத் தலைவர் கோபால் அவர்களும் தங்களது கருத்துக்களையும், பிரதிநிதிகளின் எண்ணங்களையும் அறிய நல்வாய்ப்புத் தேடித் தந்தனர்.

எல்லாத் தரப்பிலும், ‘வன்முறைகள் கூடாது’ என்றும், ‘ஒற்றுமையுடனும் -- அமைதியுடனும் தொழிற்சங்கங்கள் இயங்க வேண்டும்’ என்றும் வலியுறுத்தப்பட்டன.

பிரச்சினைகளைப் பற்றிக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரும் நல்ல வழியை விட்டுவிட்டு, ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுவதால் எவருக்கும் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், வன்முறையை என்றும் விரும்பாத இயக்கம் -- பழிக்குப் பழி என்பதைக் கண்டித்துவரும் அன்பு இயக்கம் என்பதை அனைவரும் அறிவர்.

எனவே, நொந்த நிலையில் உள்ள தொழிலாளத் தோழர்கள் அனைவரும் தங்களது குடும்பங்களையும்--குழந்தைகளையும் ஒருமுறை எண்ணிடின் விரும்பத்தகாத வேக நிகழ்ச்சிகள் ஏதும் நிகழாது!

தோழர் பிரதாப் சந்திரன் மாண்ட நிகழ்ச்சியும் -- தோழர் கண்ணனின் சாவால் கதறும் குடும்பத்தின் கோலத்தையும் எண்ணுவோரின் இதயம் துடிக்கத்தான செய்யும்.

நமக்கென்று பொறுப்புக்கள் உள்ளன; சந்தேகம் -- ஒரு தீராத பணியாகும்.

சமுதாயம் வாழத் தொழிலாளத் தோழர்கள், சகோதர உணர்வுடன் பழகியாகவேண்டும்.

சட்டத்தையும்— ஒழுங்கையும்நிலை நாட்டுவதில் இன்றைக்குள்ள அரசு சிறிதும் தயங்காது; தவறு செய்தவர்களைக் கண்காணிக்கப் போலீசார் இருக்கிருர்கள்.

நீதி நிலை நாட்டப்படும் தமிழகத்தில் -- நிலையினை மறந்து விடுவதோ, ‘நீ, நான்’ என்று வேக உணர்வைக்காட்டுவதோ, தமிழ் நாட்டுக்குச் செய்யும் நற்பணியாகாது.

தொழிலாளர்களுக்குள் பலதரப்பட்ட அரசியல் எண்ணங்கள் இருக்கலாம்; அதற்குப் பலம் தேட அவரவர் போக்கும் -- மற்றவர்களுக்குச் செய்யும் உதவியும் தான் உறுதுணையாகுமே தவிர, ஆங்காரமும் -- வேகமும் வினை விதைத்த கதை போலாகிவிடும்.

தொழிலாளர்கள் மத்தியில் பாடுபட்டவன் என்பதாலும், சென்னை நகர ஏழை எளியோர் வாழ்வுக்கும் பாடுபடும் தொண்டர்களில் ஒருவன் என்பதாலும், சிம்சன் தொழிலாளர்களை நான் வேண்டிக்கொள்வதெல்லாம் -- ‘வேகம் வேண்டாம்; கோபம் குறையட்டும்; குடும்பங்கள் பல உங்களை எதிர்நோக்கியபடி உள்ளன; அன்பான வழியில் அனைத்தையும் பெறுவோம்; தயவு செய்து அதற்கான சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளுங்கள்’ என்பதுதான்.”

# மத்திய அரசு நிறுவனத்தில் நடைபெற்ற ஊழல்

## நாடாளுமன்றத்தில் அம்பலம் -- விசாரணை நடத்த உத்தரவு

புதுடில்லி, ஜூலை 31—

மத்திய அரசுக்குச் சொந்தமான உணவு நிறுவனத்தில் (இந்திய உணவுக் கார்ப்பரேஷனில்) நடந்த ஊழல் குறித்து, நாடாளுமன்றத்தில் சரமாரியான கேள்விகள் கேட்கப்பட்டன; அதற்குப் பதிலளிக்கையில், உணவுத் துறை இணை அமைச்சர் ஏ. பி. ஷிண்டே கூறியதாவது :—

“உணவு நிறுவனம், பருப்பு வகைகளை அதிக விலைக்குக் கொள்முதல் செய்ததாகக் கூறப்பட்ட புகார்கள், அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன; இதுபற்றி விசாரணை நடத்தும்படி இரகசியப் போலீசாருக்கு உத்தரவிடப்பட்டு -- விசாரணை நடைபெற்று வருகிறது; அவர்களுடைய அறிக்கை கிடைத்ததும், சம்பந்தப்பட்டவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.”

இந்திரஜித் குப்தா (வலது கம்):— “பருப்பு வகைகள் வாங்கியதில் குறைந்த டெண்டர்களை ஏற்றுக்கொள்ளாமல் அதிக விலைக்கு உணவு நிறுவனம் கொள்முதல் செய்ததாகக் கூறப்படுவது உண்மையா? இப்படி குவிண்டாலுக்கு ரூ. 8 அதிக விலை கொடுத்து வாங்கியதால் உணவு நிறுவனத்துக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.”

வாஜ்பாய் (ஜனசங்கம்) :—“கடுகு எண்ணெய் வாங்கியதிலும் ஊழல் நடந்திருக்கிறது.”

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில், ‘இவற்றுக்கு ஆதாரம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டால் விசாரணை நடத்தப்படும்’ என்ருர்.

மேலும் பல உறுப்பினர்கள் எழுந்து கேள்வி கேட்க முயன்றபோது, கேள்வி நேரம் முடிந்துவிட்டதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

விவசாயிகள் பிரச்சினை :

# ‘ஒப்பந்த விதிகள் பரிசீலனை -- தாமதம் ஏதும் இல்லை’

## ‘செயல்படுத்தப்பட வேண்டியவைகள் உடனடியாகச் செய்யப்பட்டிருக்கின்றன’

### செய்தியாளர்களிடம் முதலமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 2—

முதலமைச்சர் கலைஞர் அவர்களை நேற்று செய்தியாளர்கள் சந்தித்து விவசாயிகள் போராட்டம் பற்றி கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி:—“விவசாயிகள் போராட்டம் பற்றிய ஒப்பந்தத்தை விரைவாகச் செயல்படுத்தவில்லை என்று சொல்கிருர்களே !”

முதல்வர் :—“விவசாயிகள் சங்கச் செயற்குழு அமைப்பாளர் நாராயணசாமி நாயுடு என்னைச் சந்தித்துப் பேசினர்; ஒப்பந்த விதிகளை விரைவாகச் செயல்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்; எந்தெந்த விதிகள் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமோ அவையெல்லாம் உடனடியாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன; எவை எவை பரிசீலிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டதோ அவையெல்லாம் பரிசீலிக்கப்படுகின்றன; இதில் தாமதம் எதுவும் இல்லை; இந்த விளக்கத்தை அவருக்குத் தெரிவித்திருக்கிறேம்; அவரும் திருப்தியுடன் சென்றிருக்கிருர்.”

## வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டுவிட்டன

கேள்வி:—“விவசாயிகள் போராட்டத்தில் கைதானவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்களா ?”

முதலமைச்சர் :—‘ஒன்றிரண்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள தவிர மற்ற அனைவரும் விடுதலையாகிவிட்டார்கள்; அதுவும் கவனத்துக்கு வந்தால் கவனிக்கப்படும்; எல்லா வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டுவிட்டன.”

கேள்வி:—“விவசாயிகள் போராட்டத்தின்போது நடந்த துப்பாக்கிச் சூடுபற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும் -- என்று மோகன் குமாரமங்கலம் பேசி வருகிருரே !”

முதலமைச்சர் :—“ஊருக்குத்தான் உபதேசம்; இது உத்தரப் பிரதேசத்துக்கு இல்லை.”

# வ. உ. சி. சிறப்பு அஞ்சல் தலை

## பிறந்த நாள் விழாவில் வெளியிடப்படும்

### தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது -- முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஆக. 2—

‘கப்பலோட்டிய தமிழர்’ வ. உ. சிதம்பரனர் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் சிறப்பு அஞ்சல் தலை வெளியிடும்படி மத்திய அரசைத் தமிழக அரசு கோரியது; அக்கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது.

வ. உ. சிதம்பரனரின் 100-வது பிறந்த நாளை நினைவுபடுத்தும் வகையில் -- செப்டம்பர் 5-ந் தேதியன்று அவரைக் கௌரவிக்கும் முறையில் -- சிறப்பு அஞ்சல் தலை வெளியிட முடிவு செய்திருப்பதாக மத்திய அரசு, தமிழக அரசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறது.

இத்தகவலைச் செய்தியாளர்களிடம் அறிவித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இத்தொடர்பில் மேலும் கூறியதாவது :—

“வ. உ. சி. 100-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்வதற்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தூத்துக்குடிக்கு வரும்போது சிறப்பு அஞ்சல் தலையை வெளியிடுவதைத் தூத்துக்குடியிலேயே வைத்துக்கொள்வதா அல்லது சென்னையில் வைத்துக் கொள்வதா என்பதை அஞ்சல் துறையினருடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும்.”

# நடக்க இருப்பவை

## பொதுக்கூட்டங்கள்

### 3--8--72

**தஞ்சை**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: கு. சுல்தான்; பேசுவோர்: அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், வேளாண்மை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி, எஸ். நடராசன் எம்.எல்.ஏ., எஸ். பெத்தண்ணன், டி.பி. கண்ணன் எம்.சி., மற்றும் பலர்.

நலவாழ்வுத் துறை அமைச்சர்

## க. அன்பழகன்

**நிகழ்ச்சிகள்**

ஆக. 3 காலை 10 மணி: திருவோணம—குடும்பக் கட்டுப்பாட்டு நிலையத் திறப்பு; மாலை 4 மணி: மெலட்டூர் குடும்பக் கட்டுப்பாட்டு நிலையத் திறப்பு: 5 30 மணி: தஞ்சாவூர்—மருத்துவக் கல்லூரிக் கண்காட்சி -- திறப்பு விழாவில் கலந்துகொள்ளல்.

ஆக. 4, 5, 6 : மதுரை மாவட்ட தி.மு.க. மாநாட்டில் கலந்துகொள்ளல்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

## சத்தியவாணிமுத்து

**நிகழ்ச்சிகள்**

ஆக. 4, 5, 6 : மதுரை மாநாட்டில் கலந்துகொள்ளல்.

ஆக. 7 மாலை 5 மணி : கீழநாச்சிகுளம்—திருமண மண்டபம் திறந்து வைத்தல்; மற்றும் திரு. பி. எஸ். மணியன் எம்.எல்.ஏ. ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுதல்.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

## ப. உ. சண்முகம்

**நிகழ்ச்சிகள்**

ஆக. 4 காலை 10 மணி: மதுரை - சென்னை மாநில ஓட்டல்கள் சங்க வெள்ளி விழாவில கலந்துகொள்ளல்.

ஆக. 5, 6 : மதுரை மாவட்ட தி.மு க. 5-வது மாநாட்டில் கலந்துகொள்ளல்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

## எஸ்.ஜே. சாதிக் பாட்சா

**நிகழ்ச்சிகள்**

ஆக. 3 : கோவை மாவட்டம்.

ஆக. 4 காலை 10 மணி: கோவை —பழனி சண்முகா ஆற்றுப் பால வேலைகளைப் பார்வையிடுதல்.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

## ச. இராமச்சந்திரன்

**நிகழ்ச்சிகள்**

ஆக. 4, 5, 6 : மதுரை மாவட்ட தி.மு க. மாநாட்டில் கலந்துகொள்ளல்.

ஆக. 7 : பாண்டியன் போக்குவரத்துக் கழக ஆய்வு.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] சென்னை-10) [illegible]